**2.25 ஊரக வளர்ச்சி துறை உதவி இயக்குநர் நிலையில் அனைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கும் முழு நேர செயலர் நியமனம் – மாவட்ட திட்ட அலுவலர் கூடுதல் பொறுப்பு– தெளிவுரைகள்**

---

ஊரக வளர்ச்சி (இ 1)துறை

கடித எண்.31645ஏ/இ1/99–4 நாள் : 10.9.1999.

அனுப்புநர்

டாக்டர் இரமேஷ் சந்திர பண்டா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்

பெறுநர்

ஊரக வளர்ச்சி இயக்குநர்
சென்னை – 15
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் (சென்னை நீங்கலாக)

ஐயா,

பொருள் – பணியமைப்பு – ஊரக வளர்ச்சித் துறை – உதவி இயக்குநர் நிலையில் அனைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கும் முழு நேர செயலர் நியமனம் – தெளிவுரை வழங்குதல்

பார்வை

1. அரசாணை (நிலை) எண்.100, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 13.4.95.
2. அரசாணை (நிலை) எண்.15, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 17.1.97
3. அரசாணை (நிலை) எண்.327, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 14.11.97
4. அரசாணை (நிலை) எண்.14, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 22.1.99
5. அரசாணை (நிலை) எண்.121, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 6.7.99

ஊராட்சி தேர்தல்களுக்குப் பின்னர் ஊராட்சி அமைப்புகளின் ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றில் 25.10.96 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் செயல்படத் துவங்கியுள்ளனர். தேர்தலுக்கு முன்னர் மாவட்ட ஊராட்சிகள் 14.4.95 முதல் அரசாணை (நிலை) எண். 100, நாள் 13.4.95–ன்படி உருவாக்கப்பட்டது.

2. மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒரு முழுமையான அமைப்பு உருவாகும் வரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்தும் மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்திலுள்ள வளர்ச்சிப் பிரிவிலிருந்தும் சில பணியாளர்களை, ஊரக வளர்ச்சித் துறையின் ஆணை (நிலை) எண்.100 நாள் 13.4.95ல் குறிப்பிட்டுள்ளபடி தற்காலிகமாக மாவட்ட ஊராட்சிகளுக்கு மாற்றப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது. மேலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் நிலையில் உள்ள 22 முதன்மை செயல் அலுவலர் பதவியும், 22 துணை செயல் அலுவலர் பதவியும் ஏனைய பதவிகளுடன் புதியதாக ஏற்படுத்தப்பட்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து மாவட்ட ஊராட்சிகளுக்கு மாற்றப்பட்டனர். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினால் செயல்படுத்த வேண்டிய வளர்ச்சித் திட்டங்களை மாவட்ட ஊராட்சிகள் செயல்படுத்துவது இவ்விரு அமைப்புகளும் தனித்தனியே செயல்பட வேண்டும் என்ற நிலைக்கு முரணாக தோன்றியதால் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்ட ஊராட்சிகள் செயல்படும் வகையில் ஏதேனும் ஒரு உதவி திட்ட அலுவலர் (துணை செயல் அலுவலர் பதவி), ஒரு உதவியாளர், ஒரு இளநிலை உதவியாளர் அல்லது உதவி புள்ளியியல் ஆய்வாளர், ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் அல்லது தட்டச்சர் மற்றும் இரண்டு அலுவலக உதவியாளர்களை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து மாவட்ட ஊராட்சிகளுக்கு மாற்றலாம் என அரசாணை (நிலை) எண். 15, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 17.1.97–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

**3.** அரசாணை (நிலை) எண். 327, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 14.11.97ல் அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை நீங்கலாக) உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய மாவட்ட திட்டக் குழுக்களை அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது. மாவட்ட திட்டப் பிரிவில் மாவட்ட திட்ட அலுவலர் பணியாற்றுவார் என்றும் மாவட்ட திட்டப் பிரிவு ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்குதல் தொடர்பாக திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை தனியாக ஆணைகள் வெளியிடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பணிகள் வழங்குவது குறித்து 1997–98ம் ஆண்டு அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் அறிக்கையில் ஏனைய பரிந்துரைகளுடன் கீழ்க்காணும் பரிந்துரையும் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

குழுவின் அறிக்கை இயல் II – பரிந்துரை எண்.27:–

‘‘மாவட்ட ஊராட்சிக்கு என்று தனியாக முழு நேர செயலரை நியமனம் செய்யவும், இதனால் மாவட்ட ஊராட்சிக்கு ஒதுக்கப்படும் நிதியைப் பயன்படுத்தி திட்டங்கள் செயல்படுத்தும் முழு அதிகாரமும் மாவட்ட ஊராட்சிக்கு அளித்திட வேண்டும்‘‘.

மேற்கூறப்பட்ட உயர்நிலைக் குழுவின் பரிந்துரையை கீழ்க்கண்டவாறு ஏற்கலாம் என்று அரசு முடிவெடுத்தது.

‘‘18 உதவி இயக்குநர் நிலையில் அனைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கும் முழு நேர செயலர் நியமிக்கப்படுவார். அவரே மாவட்ட திட்ட அலுவலராகவும் செயல்படுவார்‘‘.

மேற்கண்ட முடிவின்படி அரசாணை (நிலை) எண்.121, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 6.7.99 ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலையில் அனைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கு முழு நேர செயலாளர் நியமனம் செய்யப்பட்டு அரசு ஆணையிட்டுள்ளது. இதற்காக அனைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலையில் ஒரு பணியிடம் தோற்றுவித்தும், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநரே மாவட்ட திட்ட அலுவலராகவும் செயல்படுவார் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

**4.** அனைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் நிலையில் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு, ஊரக வளர்ச்சி உதவி இயக்குநரே மாவட்ட திட்ட அலுவலராக செயல்படுவார் என அரசு ஆணையிட்டுள்ளதால், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர், மாவட்ட திட்ட அலுவலராக செயல்படத் தேவையில்லை என்று கருதப்படுகின்றது. எனவே, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர், இனி மாவட்ட திட்ட அலுவலர் பொறுப்புகளை கவனிக்கத் தேவையில்லை என்றும் அனைத்து மாவட்ட திட்டப் பிரிவிலும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் செயலாளராக செயல்பட வேண்டும் என்று அரசு அறிவுறுத்துகிறது. இந்த அறிவுரைகள் 1.10.99 முதல் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் அரசு அறிவுறுத்துகிறது.

**5.** இக்கடிதம் நிதி மற்றும் திட்டம் மற்றும் வளர்ச்சி ஆகிய துறைகளின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் முறையே 3262/எப்.எஸ்/ப்பி/99, நாள் 31.8.99 மற்றும் 200/எஸ்/99, நாள் 3.9.99ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

அரசு செயலாளருக்காக